மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பரிசு கொடுக்கிற காரணத்தினால் வயது முதிர்ந்தவர்கள்தான், வயது குறைந்தவர்களாகச் சொல்லிக்கொள்கிறார்கள்.

செஞ்சி வட்டார வளர்ச்சி

* 174 வினா—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டார வளர்ச்சிக்காக 1967–68-ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதில் இதுவரைக்கும் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ரூ. 1,06,300.

(இ) ரூ. 95,299 (31—3—1968 வரையில்).

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, செஞ்சி வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டமாக இருக்கிறது. அதற்கு இப்போது செலவிடப்படுகின்ற தொகை போதாததாக இருப்பதால், வட்டாரத்தின் வளர்ச்சிக்கேற்றவாறு அதிகமாக நிதி ஒதுக்கித்தர அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : வட்டார வளர்ச்சிக்கென்று ஒதுக்கப்பட்ட தொகையை அந்தந்த வட்டாரங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறோம். மேலும் நிதிநிலை இடம் கொடுத்தால் அங்கத்தினரின் வேண்டுகோள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்

*175 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலகிரி மலை, ஜவ்வாது மலைப் பகுதிகளில் Tribal Blockகள் ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, பழங்குடி மக்களின் வளர்ச்சிக்காக வேண்டி, அவர்களுடைய முன்னேற்றத்திற்காக வேண்டி, டிரைபிள் பிளாக்குகளை அமைப்பதற்கு ஏற்படக்கூடிய செலவுத் தொகைகள் பூராவையும் மத்திய சர்க்கார் அளிக்கிறார்களா? அப்படி மத்திய சர்க்கார் அளித்தால், நம் மாநிலத்திலும் இதுபோன்ற பிளாக்குகளை அமைத்து அந்தப் பணத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நான்காவது திட்டக் காலத்தில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைப் பகுதிகளில் பழங்குடி மக்களின் வளர்ச்சிக்காக வட்டார பிளாக் அமைப்பதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால் 1967–68-ம் ஆண்டின் திட்டச் செலவு குறைக்கப்பட்டதன் காரணமாக இந்த ஒரு திட்டத்தையும் கைவிடுமாறு மத்திய அரசு அறிவித்துள்ளது.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற பிளாக்குகளை ஏலகிரி பகுதியில் இருக்கக்கூடிய பழங்குடி மக்களுக்கும் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று மாவட்ட